# சென்னையைச் சீரழித்து பாழ்படுத்திய அ.தி.மு.க. அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! - முதல் பக்கத் தொடர்ச்சி



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.3.2024) சென்னை, தங்க சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் தொடக்க விழாவில், திட்டப்பணிகள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார்.

அண்ணா சாலை, அண்ணா மேம்பாலம், வள்ளுவர் கோட்டம், செம்மொழிப்பூங்கா, தொல்காப்பியப் பூங்கா, நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகமாக கட்டப்பட்டு இன்று பெரிய பல்நோக்கு அரசு மருத்துவமனையாக இருக்கின்ற ஓமந்தூரார் மருத்துவமனை, டைடல் பார்க், ஓ.எம்.ஆர் ஐ.டி.காரிடர், மெட்ரோ ரயில், கோயம்பேடு பேருந்து நிலையம், கோயம்பேடு காய்கறி அங்காடி, சென்னையில் வெள்ள பாதிப்புகளை தடுக்க பல நூறு கிலோமீட்டருக்கு மழைநீர்வடிகால் பணிகள், குடிநீர்த் தேவைக்கு நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், கத்திபாரா மேம்பாலம், கோயம்பேடு மேம்பாலம், பாடி பாலம், மீனம்பாக்கம் பாலம், மூலக்கடை பாலம், மேற்கு அண்ணாநகர் பாலம், வியாசர்பாடி பாலம், இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்

**சென்னையில் தி.மு.க. அரசால் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்!**

இப்படி திரும்பிய பக்கம் எல்லாம் சென்னைக்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வளர்ச்சியை ஏற்படுத்தியது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக அரசு!

நான், சென்னை மாநகரத்தின் மேயராக இருந்த காலக்கட்டம், என் மனதில் இன்னும் பசுமையாக இருக்கிறது. 'சென்னை மாநகரத்தின் தந்தை' என்று சொல்வதைவிட, இந்த மாநகரத்தின் முதல் சேவகனாக இருப்பதையே விரும்புறேன் என்று அப்போது சொன்னேன். மேயராக மட்டுமில்லை, முதலமைச்சராகவும், அப்படித்தான் செயல்படுகிறேன்; அது உங்களுக்கே தெரியும்!

மேயராக இருந்த காலத்தில், நம்முடைய பணிகளை பார்த்து, இந்தியாவின் மற்ற மாநகரங்கள் பொறாமைபடுகின்ற அளவுக்கு திட்டங்களை தீட்டினோம். போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, பத்துப் பாலங்கள் கட்டினோம். மாநகராட்சிப் பள்ளிகளை தரம் உயர்த்தி, மாணவர்களும், பெற்றோர்களும் சீட் கிடைக்க காத்திருக்கும் சூழலை உருவாக்கினோம்.

முதன்முதலாக, மழலையர் வகுப்பு தொடங்கப்பட்டது, குப்பை இல்லாத சென்னையை உருவாக்கினோம், திடக்கழிவு மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தோம், புதிய பூங்காக்கள், சாலையோர பூங்காக்கள், கூவம் கரையோர பூங்கா, விளையாட்டு திடல்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், மாணவர்களுக்கு மடிக்கணினி, சென்னைத் தெருக்களுக்கு அன்னைத் தமிழ்ப்பெயர், மூத்தகுடிமக்கள் சிகிச்சை மையம், மாநகராட்சி கணினி மையம், இப்படி, சென்னையை, 'சிங்காரச் சென்னை'யாக மாற்றினோம்.

நம்முடைய ஆட்சியில்தான் சென்னையின் அந்த காலம் பொற்காலமாக இருந்தது! இடைக் காலத்தில், பத்து வருடம் பதவியில் இருந்தவர்கள் சென்னையை சீரழித்து, பாழ்படுத்தினார்கள். பத்து வருடம் கழித்து, இப்போது, மீண்டும் கழக ஆட்சி மாநிலத்திலும் உதயமாகி, நகர்ப்புற வளர்ச்சியில், நேரு அவர்களும் மிக மிகச் சிறப்பாக இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவருக்கு துணையாக, சென்னை மாநகரத்தின் வணக்கத்துக்குரிய மேயர் பிரியா அவர்களும், துணை மேயர் மகேஷ் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்! ஏன் நம்முடைய கவுன்சிலர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

நம்மை பொறுத்தவரை, துயர் வரும் நேரத்தில் துணை நிற்பது மட்டுமில்லை; துயர் துடைக்க புதிய திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டு வருகிறோம்! சென்னை மீண்டும் புதுப்பொலிவு அடைந்து கொண்டு வருகிறது. இதற்காகவே தீட்டப்பட்டிருக்கின்ற சிறப்புத் திட்டம்தான் 'வடசென்னை வளர்ச்சித் திட்டம்!'

திராவிட மாடல் அரசின் கடந்த பட்ஜெட்டில், இந்த திட்டத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் அறிவித்தோம்! ஆனால், வடசென்னையின் மக்கள் தொகை, இடப்பற்றாக்குறை, மக்கள் நெரிசல், போக்குவரத்து நெரிசல், இந்தப் பகுதி மக்களிடம் இருந்து வந்த கோரிக்கைகள், இதையெல்லாம் மனதில் வைத்து, இன்றைக்கு அந்தத் தொகையை நான்கு மடங்கு உயர்த்தி,

4 ஆயிரத்து 181 கோடி ரூபாய் மதிப்பில், 11 அரசுத் துறைகளுடன் இணைந்து, வடசென்னை வளர்ச்சிக்கு இந்த மெகா திட்டம் செயல்பட போகின்றது!

**மேலும் பல்வேறு திட்டங்கள் உருவாக்குவோம்!**

இந்த திட்டத்தின்கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்டங்களுக்கு 440 கோடியே 62 இலட்ச ரூபாயும், இதர துறைகளின் திட்டங்களுக்கு, 886 கோடியே 46 இலட்ச ரூபாயும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒதுக்கீடு செய்யும். மீதமுள்ள நிதியை அந்தந்த துறைகள், வாரியங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடுகள் மூலம் அடுத்த ரெண்டு ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த திட்டத்தில் என்னென்ன செய்யப் போகிறோம்? மாதிரிப் பள்ளிகளை உருவாக்குதல், குறைந்த விலையில் வீட்டுவசதி, திறன் மேம்பாட்டு மையங்களை உருவாக்குதல், புதிய பேருந்து நிலையங்கள் மற்றும் பணிமனைகளை நிர்மாணித்தல், மேம்படுத்துதல், முக்கியமான பகுதிகளில் துணை மின் நிலையங்கள், போதைக்கு அடிமையானவர்களை மீட்கும் மறுவாழ்வு மையம், மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் சிசிடிவி கேமராக்கள், மருத்துவச் சுகாதார நிலையங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான உயர்சிறப்புப் பிரிவு, தரமான குடிநீர் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்படும்.

அதுமட்டுமல்ல, இந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை ஏற்று, கழிவுநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள், பொதுப் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சந்தைகள், சலவை செய்யுமிடம் மற்றும் டயாலிசிஸ் மையங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் வடசென்னை முழுக்க முக்கியமான இடங்களில் நிறுவப்படும். இன்னும் இருக்கிறது!

640 கோடி ரூபாய் செலவில், கொடுங்கையூரில் உயிரி சுரங்கத் திட்டம், 238 கோடி ரூபாய் செலவில் இரண்டு பெரிய பாலங்கள், 80 கோடி ரூபாயில் தணிகாசலம் கால்வாய் புனரமைப்புத் திட்டம் 823 கோடி ரூபாய் செலவில் பாரிமுனை பேருந்து முனையம் மறுகட்டுமானம், 15 இடங்களில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 7 ஆயிரத்து 60 சேதமடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 9 ஆயிரத்து 798 புதிய குடியிருப்புகள் ஆயிரத்து 567 கோடியே 68 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப் போகிறோம்!

**அடுத்த 3 ஆண்டுகளில் 200 திட்டங்கள்!**

இப்படி, இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கின்ற 87 திட்டங்கள் உட்பட அடுத்த மூன்று ஆண்டுகளில் 200 திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது.

இந்தத் திட்டங்கள் எல்லாம் முடிவுறுகிற போது, வடசென்னையின் வரலாற்றில், ஒரு புதிய சகாப்தத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எழுதியிருக்கும் என்பதை பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**வடசென்னை வளர்ச்சித் திட்ட பணிகள் விரிவாக்க விழா**

**14.3.2024**

---

### க.பொன்முடியின் அமைச்சர் பதவி ஏற்புக்கு தாமதம் செய்தால் ஆளுநர் மீது வழக்கு!

### எடப்பாடி பழனிசாமி மீதும் பா.ஜ.க. அண்ணாமலை மீதும்

# ரூபாய் 1 கோடி கேட்டு மான நஷ்ட வழக்கு!

### தி.மு.கழகம் தொடர்ந்துள்ளதாக ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை,மார்ச்.16 -

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அபார வெற்றி பெறும் என்பதற்காகவே எடப்பாடி பழனிச்சாமியும், பா.ஜ.க.வும் தொடர்ந்து அவதூறு பிரச்சாரங்கள் செய்து வருகிறது என்றும், எடப்பாடி பழனிச்சாமி மீதும் பா.ஜ.க. அண்ணாமலை மீதும் ஒரு கோடி ரூபாய் மான நஷ்ட வழக்கை திமுக தொடர்ந்துள்ளது என்றும், போதை பொருள் கடத்தல் யாருடைய ஆட்சியில் அதிகமாக இருந்தது என்பது தமிழக மக்களுக்கு தெரியும் என்றும், முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு அமைச்சர் பதவி ஏற்பை ஆளுநர் ரவி காலதாமதம் செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்றும், சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில் தெரிவித்தார்.



இது குறித்து அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்துள்ள பேட்டி வருமாறு:

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தொடர்ந்து தி.மு.க. மீது களங்கம் விளைவிக்கும் வகையில் அவதூறு பேசி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சருக்கும் போதைப்பொருள் விற்பனை செய்பவருக்கும் தொடர்பு இருப்பதாக தொடர்ந்து அவதூறு பேசி வருகிறார்.

எடப்பாடி பழனிச்சாமி மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் ஒரு கோடி ரூபாய் மான நஷ்டம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

தமிழ்நாட்டில் போதை பொருள் யாருடைய ஆட்சியில் அதிகம் இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்.

அண்மையில் கைது செய்யப்பட்டுள்ள சாதிக் என்பவருக்கும் தி.மு.க.வுக்கும் தொடர்பு இருப்பது போல ஒரு தவறான பிரச்சாரத்தை எடப்பாடி பழனிச்சாமி செய்து வருகிறார்.

ஆனால் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் சாதிக் மீது ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது 2013 ஆண்டு வழக்கு பதிவு செய்து, 2017 ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்தபோதே சாதிக் விடுதலை செய்யப்பட்டார். விடுதலைக்கு யார் காரணம் என்றால் எடப்பாடி பழனிச்சாமியால் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர் சீனிவாசன் என்பவர் தான். குற்றம் சாட்டப்பட்ட சாதிக் வழக்கை வேறு வகையான திசை திருப்பி அவருக்கு விடுதலை பெற்று தந்திருக்கிறார்.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு இது போன்ற தவறான பிரச்சாரத்தை எடப்பாடி பழனிச்சாமி ஈடுபட்டு வருகிறார். எடப்பாடி பழனிச்சாமி மீதும் அண்ணாமலை மீதும் கிரிமினல் வழக்கு போட்டுள்ளோம்

பி.ஜே.பி. யோட அடிமையாக எடப்பாடி பழனிச்சாமி இருக்கிறார்.

குஜராத்தில் நடந்த அந்த போதை பொருள் சம்பவத்தை எதிர்த்து மனித சங்கிலி நடத்தி இருந்தால் நாங்கள் சொல்லியிருப்போம் ஆனால் இன்றும் பி.ஜே.பி.யுடன் கைகோர்த்து எடப்பாடி செயல்பட்டு வருகிறார் என்பது தெரிகிறது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டாலும் முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு அமைச்சர் பதவி வழங்கலாம். தேர்தலுக்கு முன்பே முதல்வர் ஆளுநருக்கு கடிதம் எழுதியுள்ளார். தேர்தலுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கவுன்சிலர் போல் பிரதமர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்துக் கொண்டு இருக்கிறார்.

அவர் தமிழ்நாட்டுக்கு வரும் போதெல்லாம் தி.மு..கவிற்கு வாக்குகள் அதிகரிக்கும். ஆளுநர் ரவி பொன்முடிக்கு அமைச்சர் பதவி ஏற்புக்கு காலதாமதம் செய்தால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்போம். ஏற்கனவே ஆளுநர் ரவி நீதிமன்றம் மூலம் பல குட்டுக்களை வாங்கியுள்ளார்.

அதை சந்திக்க தயாராக இருந்தால் நீதி மன்றமே அதற்கு பதில் சொல்லும்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி திருவெறும்பூர் தொகுதியில் மக்களின் மின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக வார்டு எண் 35 ஜோதி நகர், வீதிவடங்கம், குவளக்குடி ரிட்ஸ் அவென்யூ, வாழவந்தான் கோட்டை, பெரியார்நகர். சோழம்மா தேவி, அம்பேத்கர் நகர் மற்றும் ஆகிய பகுதிகளில் ரூ. 5,50,960 மதிப்பீட்டில் புதிய மின் மாற்றியை திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன், திருவெறும்பூர் ஒன்றியக் குழு தலைவர் சத்யா கோவிந்தராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் மகாதேவன், பழனியப்பன் மற்றும் பகுதி பொதுமக்கள் மின் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர் .

---

### பொள்ளாச்சியில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த

# நீதிமன்றக் கட்டிடத்திற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ரூ.14.59 கோடி ஒதுக்கீடு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 16 -

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தித் தர 14 கோடியே 59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.03.2024 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கான முடிவுற்ற பணிகள் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா ஆகிய அரசு விழாக்களில் பங்கேற்று, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

அச்சமயம், பொள்ளாச்சியில் தற்போது கட்டப்பட்டு வரும் 10 நீதிமன்றங்கள் மற்றும் 5 நீதிபதிகள் குடியிருப்புகள் அடங்கிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள் (Additional Amenities) செய்து தர வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டது.

அக்கோரிக்கையினை பரிசீலனை செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேற்படி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு ஏதுவாக, 14 கோடியே 59 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து நேற்று (14.3.2024) ஆணையிட்டுள்ளார்.

இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

# கயல் தினகரன் நினைவேந்தல் நிகழ்ச்சி!

### படத்தை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைத்து சிறப்புரை!

*சென்னை, மார்ச் 16 -*


*கழக இலக்கிய அணி முன்னாள் தலைவர் கயல் தினகரன் நினைவேந்தல் நிகழ்ச்சி 17.03.2024 - ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் முத்தமிழ் பேரவை, டி.என். இராசரத்தினம் கலையரங்கம் துர்காபாய் தேஷ்முக் சாலை, இராஜா அண்ணாமலை புரத்தில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்ச்சியில் கயல் தினகரனின் புதல்வர்கள் தி.தமிழ்ச்செல்வன், தி.செழியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சிக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.*

*கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அன்னாரது படத்தினை திறந்து வைத்து பேருரையாற்றுகிறார்.*

*இந்நிகழ்ச்சியில் குன்றக்குடி ஆதீனம் குன்றக்குடி*



*பொன்னம்பல அடிகளார், கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன், தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், கவிதா பதிப்பகம் - தலைவர் சேது சொக்கலிங்கம் ஆகியோர் நினைவுரையாற்றுகின்றனர்.*

*திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் நன்றி கூறுகிறார்.*

*முன்னதாக கழக மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பனின் இசையஞ்சலி நடைபெறுகிறது.*

---

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

## உடுமலைப்பேட்டை மேற்கு, உடுமலைப்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்

**திருத்தம்**

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட உடுமலைபேட்டை மேற்கு, உடுமலைபேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்;

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைபேட்டை மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **பெரியபாப்பனூத்து ஊராட்சி உடுமலைபேட்டை மத்திய ஒன்றியக் கழகத்தின் கீழும்**

உடுமலைபேட்டை மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **கணபதிபாளையம் ஊராட்சி உடுமலைபேட்டை மேற்கு ஒன்றியக் கழகத்தின் கீழும்** இயங்கும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.